**31.01.2019 – Pro.OP.9/2017 - P.W.1 - Arumugam**

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு, பிரமாணம் செய்யப்பட்டு, குறுக்கு விசாரணைக்கு அனுமதிக்கப்படுகிறார்.

குறுக்கு விசாரணை:

உயிலை பதிவு செய்வதற்காக இம்மனு தாக்கல் செய்திருக்கிறேன். என் அக்கா கணவர் எழுதி வைத்த உயில் சம்மந்தமாக மனு தாக்கல் செய்திருக்கிறேன். என் மாமா பெயர் சுந்தரேசன். இந்த மனுவின் எதிர்மனுதாரர் சுந்தரேசனின் தம்பி மகன். அவருடைய தகப்பனார் பெயர் வாசுதேவன். சுந்தரேசன் அண்ணன். வாசுதேவன் தம்பி. சுந்தரேசன் வீட்டு வசதி வாரியத்தில் வாட்ச்மேனாக இருந்தார். செண்பகவள்ளி மின்வாரியத்தில் கணக்காளராக இருந்தார். இரண்டு பேருமே ஓய்வு பெற்றபிறகு தான் இறந்தார்கள். என் அக்கா முதலில் இறந்துவிட்டார். அப்போது என் அக்காவுக்கு 62 வயது. 05.11.2014ம் தேதி அவர் இறந்துவிட்டார். உடல்நிலை சரியில்லாமல் இருந்து வேலூரில் சி.எம்.சி. மருத்துவமனையில் இறந்துவிட்டார். என் அக்காவும், மாமாவும் சத்துவாச்சாரி வள்ளலாரில் குடியிருந்தார்கள். என் சொந்த ஊர் குடியாத்தம். என் அக்கா வீட்டிலிருந்தேன். எனக்கு ரேஷன் கார்டு, ஆதார்டு கார்டு குடியாத்தத்தில் உள்ளது. அது எனக்கு நிரந்தர முகவரி. என் அக்கா வீட்டில் குடியிருப்பதாக மனுவிற்காக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என் மாமாவுடன் பிறந்தவர்கள் 3 தம்பிகள். அதில் ஒருவர் இறந்துவிட்டார். வாசுதேவனுக்கு எத்தனை மகன்கள் என்பது தெரியாது. சுந்தரேசனின் இன்னொரு அண்ணன் கந்தசாமி. அவருடைய மகன் முரளிதரன். முரளிதரன் தான் கொள்ளி வைத்தார். என் அக்கா இறந்து 48 நாட்களில் என் மாமா இறந்துவிட்டார். என் அக்கா என் மாமாவை கவனித்துக்கொண்டார். நானும் கவனித்தக்கொண்டேன். என் மாமா நல்லநிலையில் தான் இருந்தார். மாரடைப்பால் இறந்துவிட்டார். இறக்கும்போது

அவருக்கு 80 வயது. அவர் மனநிலை பேதலித்து படுத்த படுக்கையாக இருந்தார் என்றால் சரியல்ல. அவர் சுயநினைவு இல்லாமல் இருந்தார் என்றால் சரியல்ல. அவரை எதிர்மனுதாரர் தான் கவனித்து வந்தார் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரர் வி.ஐ.டி.யில் வேலை பார்ப்பது தெரியாது. நான் சட்டவிரோதமாக சொத்தை அனுபவித்து வருவதாக எதிர்மனுதாரர் அறிவிப்பு அனுப்பினார். அதனால் இந்த மனு தாக்கல் செய்தேன். எதிர்மனுதாரர், எனக்கு அறிவிப்பு கொடுத்த தேதி நினைவில்லை. எதிர்மனுதாரரின் மற்ற சகோதரர்கள் அவருடைய மகன்களை சேர்க்காமல் இம்மனு தாக்கல் செய்துள்ளது தவறு என்றால் சரியல்ல. என் அக்கா பெயரில் உள்ள டெபாசிட்டில் எங்களை யாரும் நாமினியாக போடவில்லை. சுந்தரேசனை நாமினியாக போட்டுள்ளார். சுந்தரேசனை நாமினியாக போடவில்லை என்றால் சரியல்ல. சுந்தரேசன் ஆரோக்கியமான நிலையில் இருந்தார். உயில் எழுதும்போது நானிருந்தேன். மதியம் 3 மணிக்கு உயில் எழுதப்பட்டது. அதில் என்ன எழுதினார் என்பது தெரியும். படித்துக் காட்டினார்கள். கையெழுத்து போடும் நிலையில் அவர் உடல்நிலை இல்லை என்றால் சரியல்ல. ஆனால் கைரேகை தான் வைத்தார். அவர் கை உதறல் எடுத்ததால் கைரேகை வைத்தார். இந்த விவரத்தை மனுவில் சொல்லியிருக்கிறேன். பச்சை காகிதத்தில் எழுதப்பட்டது. ஸ்டாம்ப் பேப்பரில் எழுதப்படவில்லை. ஆவணம் பதிவு செய்யவில்லை. பதிவு செய்ய வாரிசு சான்றிதழ் கேட்டார்கள். பத்திரம் எழுதுபவர் கேட்டார். 9ம் தேதி உயில் எழுதப்பட்டது. 11ம் தேதி பதிவு செய்யவேண்டும் என்று கேட்டோம். பத்திரம் எழுதியவர் கேட்டார். நானும் கூடபோனேன். பத்திர பதிவு அலுவலகம், வேலப்பாடி போய் கேட்டோம். எ.பி.கங்காதரன் என் உறவினர் இல்லை. திருமணத்திற்கு பிறகு அவர் எனக்கு பழக்கம். என் சொந்த ஊர் பிச்சனூரில் உள்ளது. கங்காதரனும் அங்கு தான் இருக்கிறார். திருபுராநந்தன் என் உறவினர் இல்லை. என் மாமாவின் நண்பர்.

இருசன் என்பவர் டைப் செய்து வந்து, வீட்டில் கையெழுத்து வாங்கினார். அவர் எங்கு டைப் செய்தார் என்பது தெரியாது. உயிலை சுந்தரேசன் எழுதவில்லை என்றால் சரியல்ல. அவர் கையெழுத்து போடும் நிலையில் இல்லை என்றால் சரியல்ல. என் அக்கா, மாமாவிற்கு சொந்தமான சொத்தை அபகரிப்பதற்காக இம்மனு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. உயில் சட்டப்படி செல்லக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. சாட்சிகள் என் நெருங்கிய நண்பர்கள் என்றும், அவர்களை வைத்துக்கொண்டு உயிலை பொய்யாக தயார் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிர்மனுதாரரும், முரளிதரனும் தான் சொத்துக்கு வாரிசு என்றால் சரியல்ல. சொத்துக்களை அவர்கள் தான் இன்றுவரை அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. சுந்தரேசன் என்னுடைய பெயருக்கு உயில் எழுதிவைக்கவேண்டிய அவசியம் இல்லை என்றால் சரியல்ல. சுந்தரேசன் நல்ல மனநிலையில் இல்லை என்றால் சரியல்ல. மனு தள்ளுபடி செய்யவேண்டும் என்றால் சரியல்ல.

ம.வி.

செண்பகவள்ளியின் வாரிசு சான்றிதழை தான் கேட்டார்கள்.